இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 14-07-2023

15 லட்சம் ரூபாய்... 15 ஆயிரம் தரம் ஏலம்...

ஆட்சிக்கு வந்தால் கருப்பு பணத்தை மீட்டு ரூ.15 லட்சம் தருவோம் என்றீர்களே? ரூ.15 ஆயிரமாவது கொடுத்தீர்களா? 15 ரூபாயாவது கொடுத்தீர்களா?' என்று பா.ஜ.க.வை பார்த்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டார்கள்.

★ கொடுத்தோம்.

★ கொடுக்க முடியவில்லை.

★ சிலருக்குத்தான் கொடுக்க முடிந்தது. - என்பதுதான் அதற்கான பதிலாக இருக்க முடியும். பா.ஜ.க.தான் பொய்யில் புரளும் கட்சியாச்சே! 'நாங்கள் அப்படி வாக்குறுதி அளிக்கவே இல்லை' என்று சொல்கிறார் அண்ணாமலை.

குஜராத் முதலமைச்சராக இருந்த நரேந்திரமோடி அவர்கள் 2013 ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி சத்தீஸ்கர் மாநிலம் காங்கர் மாவட்டத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய பேச்சு இது. பத்தாண்டுகள் ஆகிவிட்டது.

"இந்தியாவின் மோசடிப் பேர்வழிகள் கறுப்புப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் டெபாசிட் செய்கிறார்கள். அந்தப் பணத்தைத் திரும்பக் கொண்டு வந்தால், ஒவ்வொரு ஏழை இந்தியனும் ரூ.15 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரை இலவசமாகப் பெறுவான். பா.ஜ.க. வெற்றி பெற்றால் கறுப்புப் பணத்தை மீட்போம்" என்று பேசினார் அன்றைய நரேந்திரமோடி அவர்கள். அவர் எவ்வளவு கோடி ரூபாய் கருப்புப் பணத்தை மீட்டார் என்பது அவருக்கே வெளிச்சம். மோடியின் பத்தாண்டு ஆட்சியில் ஒருவருக்குக்கூட 15 லட்சம் ரூபாய் கிடைக்கவில்லை. ஆனால், 2014 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க-வுக்கு 282 எம்.பி-களையும் அடுத்து வந்த 2019 நாடாளுமன்றத் தேர்தலிலும் 303 எம்.பி-களையும் பெற்றுக் கொடுத்தது. அடுத்து இதே மாதிரியான பொய்யுடன் அரசியல் களத்துக்கு வரப் போகிறார்கள்.

2015 பா.ஜ.க. ஆட்சிக்கு வந்து ஓராண்டு ஆனது. ஓராண்டின் முடிவில் அனைத்து எதிர்க்கட்சிகளும் கேட்டது என்னவென்றால், 'ரூ.15 லட்சம் தருவதாகச் சொன்னீர்களே? என்ன ஆச்சு?' என்பதுதான். 'அப்படியா? நாங்கள் அப்படிச் சொல்லவில்லையே!' என்று பிரதமர் மோடி சொல்லவில்லை. இந்தக் கேள்வி நேரடியாக உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களிடம் கேட்கப்பட்டது. அவரும், 'நாங்கள் அப்படி எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை' என்று சொல்லவில்லை. மாறாக, 'பொய்யாக அப்படி வாக்குறுதி அளித்தோம்' என்பதை அப்போதே அமித்ஷா அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

2015 ஆம் ஆண்டு ஏ.பி.பி. ஊடகத்துக்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா அளித்த பேட்டியில், "தேர்தல் தந்திரமாக அப்படிச் சொன்னோம். இது ஒரு உருவகம்தான்" என்று கூறினார். 2.6.2015 அன்று 'எக்கனாமிக் டைம்ஸ்' நாளேடு வெளியிட்ட செய்தி இதுதான். BJP president Amit Shah has said Narendra Modi's 'promise' as the party's PM candidate that each Indian would receive Rs 15 lakh when black money would be repatriated from abroad was an 'idiom' and should not be taken literally Although the 'promise' was never realistic, the new interpretation suggests that BJP was looking for a way to wriggle out after being accused by political opponents of reneging on its poll promise. It may also indicate the difficulty the government was facing to repatriate black money from foreign shores.

Shah's remarks came in response to a question during an interview to a news channel. "Modiji's statement was an idiomatic expression (jumla) that was given during the Lok Sabha polls. Everybody knows that this black money doesn't go to accounts of people," Shah said. During the Lok Sabha election campaign, Modi had often said if NDA comes to power it will ensure that Indian blackmoney invested illegally in tax havens abroad would be brought back to and this fund would be distributed to the poor, with each one getting Rs 15 lakh in their accounts - என்பது ஆகும். - 'ரூ.15 லட்சம் தருவதாக நாங்கள் சொன்னது உண்மைதான். ஆனால் அது ஜும்லா' என்று சொன்னவர் அமித்ஷா.

ஜும்லா என்ற இந்தி/ உருதுச் சொல்லுக்குப் பொய்யான வாக்குறுதி, பொய்யான வாக்கியம், வெற்றுச் சொல் என்று பொருள்.

இன்னொரு முக்கியமான அமைச்சர் நிதின் கட்கரியிடம் இதே கேள்வி கேட்கப்பட்டது. 'நாங்கள் அதிகாரத்துக்கு வரமாட்டோம் என்று நினைத்து அப்படிச் சொல்லி விட்டோம். ஆனால் வந்து விட்டோம், என்ன செய்வது?' என்று பதில் அளித்தார் அவர். (10.10.2018 அன்று இப்படிச் சொன்னார்)

இன்னொரு முக்கியமான ஒன்றிய அமைச்சர் ராமதாஸ் அத்வாலே. "ரிசர்வ் வங்கியில் அவ்வளவு தொகை இல்லாததால் எங்களால் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை. விரைவில் ரூ.15 லட்சம் தந்து விடுவோம்" என்று 19.12.2018 அன்று வெளிப்படையாகவே செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

ராஜ்யசபாவில் எம்.பி-க்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அருண் ஜெட்லி அளித்த பதில் என்ன தெரியுமா? "கருப்புப் பணம் தொடர்பான விசாரணையில் இதுவரை வரி ஏய்ப்பு செய்யப்பட்டு வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட 3,250 கோடி ரூபாய் தான் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கி உள்ள கருப்புப் பணம் முழுவதுமாக மீட்டுக் கொண்டு வரப்பட்டால் இந்திய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தலா 15 லட்சம் ரூபாய் கிடைக்கும் என தேர்தல் பிரச்சாரத்தின் போது மோடி கூறினார். அந்தப் பேச்சானது வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள கருப்புப் பணம் தொடர்பாக வெளியான பல மதிப்பீடுகளின் அடிப்படையில் உத்தேசமாக சொல்லப்பட்டதாகும்." என்று கூறினார். (2015 மார்ச்)

ஒன்றிய அமைச்சர்கள் அருண் ஜெட்லி, அமித்ஷா, நிதின் கட்கரி, ராம்தாஸ் அதாவ்லே ஆகியோர் ஒப்புக் கொண்டதுதான் - ரூ.15 லட்சம் தருவோம் என்பது ஆகும். இதனைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேள்வியாகக் கேட்கிறாரே தவிர வேறல்ல!

jumla **கட்சிக்கு இந்த ஆதாரங்கள் எல்லாம் அவசியமில்லை!**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் தற்போது காலியாகவுள்ள இடத்தில் 10 தளங்களுடன் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாணவர் விடுதிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தர மோகன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை சைதாப்பேட்டையில்

ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் கல்லூரி மாணவர் விடுதி புதிய கட்டிடம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டப்பணியை தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 14 - சென்னை, சைதாப்பேட்டை, எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் காலியாகவுள்ள இடத்தில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதி கட்டும் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் தற்போது காலியாகவுள்ள இடத்தில் 10 தளங்களுடன் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாணவர் விடுதிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலிருந்து உயர்கல்வி பயில சென்னைக்கு வருகை தரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக, சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி கட்டப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் காமராஜர் அவர்களால் 15.12.1961 அன்று திறந்து வைக்கப்பட்டது. இது வரையில் சுமார் 25,000 மாணவர்கள் அந்த விடுதியில் தங்கி உயர் கல்வி பெற்று பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2022-23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சென்னை, எம்.சி. ராஜா கல்லூரி விடுதி வளாகத்தில் தற்போது காலியாகவுள்ள இடத்தில் சமார் 1,01,101 சதுர அடி பரப்பளவில் 10 தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னையில் உள்ள பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பொறியியல், தொழில்நுட்பம், கலை மற்றும் அறிவியல் துறைகளில் பயின்று வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து வருவதால் அவர்களது தங்குமிடத் தேவையை பூர்த்தி செய்யவும், அவர்களது திறனை மேம்படுத்தவும் எம்.சி.ராஜா விடுதி வளாகத்தில் புதியதாக மொத்தம் 1,01,101 சதுர அடி பரப்பளவில் 484 மாணவர்கள் தங்குமளவிற்கு தரைத்தளம் மற்றும் 10 தளங்களுடன் கூடிய 121 தங்கும் அறைகள், நூலகம், உடற்பயிற்சிக்கூடம், பார்வையாளர் அறை, பன்னோக்கு அரங்கம் ஆகிய நவீன வசதிகளுடன் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விடுதிக் கட்டடம் கட்டும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு. மகேஷ் குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் பி. சந்தர மோகன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த. ஆனந்த், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு. அருணா, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ். அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞருக்கு மெரினாவில்

பேனா சின்னம் அமைக்க தடைகோரிய மனு தள்ளுபடி!

மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வாதாடிய வழக்கில் உச்சநீதி மன்றம் அதிரடி உத்தரவு!

புதுடெல்லி, ஜூலை 14- சென்னை மெரினா கடல் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக பேனா சின்னம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவை உச்சநீதி மன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னை மெரினா கடல் பகுதியில் 134 அடி உயர பேனா நினைவுச் சின்னம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்த பேனா சின்னம் அமைப்பதற்கு எதிராக மதுரையைச் சேர்ந்த கே.கே. ரமேஷ் என்பவர் உச்ச நீதி மன்றத்தில் பொது நல மனுவைத் தாக்கல் செய்திருந்தார். வழக்குரைஞர் ஜெயா சுகின் மூலம் தாக்கல் செய்யப்பட்டிருந்த அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழக அரசு மெரினா கடல் பகுதியில் 134 அடி உயரத்துக்கு முத்தமிழறிஞர் கலைஞர் நினைவாக பேனா சின்னத்தை அமைக்கத் திட்டமிட்டிருப்பது, கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிகளுக்கு எதிராக உள்ளது.

தற்போதைய பொது நல மனுவானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, கடல் அளவு உயர்வதையும், அரிப்பையும் தடுக்கும் வகையில் சம்பந்தப்பட்ட அனைத்து மத்திய, மாநில அரசுகள் உள்ளடங்கியஎதிர் மனு தாரர்களுக்கு உத்தரவிட வேண்டும்.

இந்தியாவின் மேலும், அனைத்து மாநிலங்களிலும் கடலோரபிராந்தியங்களில் எவ்வித கட்டுமானப் பணி

அல்லது மாற்றுப் பணி அல்லது வளர்ச்சிப் பணி ஆகியவற்றை மேற்கொள்வதைத் தடுக்க உத்தரவிட வேண்டும்.

மெரினா கடற்கரையின் உள்பகுதியில் 134 அடி உயர பேனா சிலை அமைக்கும் தமிழக அரசின் முடிவையும் ரத்து செய்ய வேண்டும். இயற்கை நீதியின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றாமல் தமிழக அரசு இந்த பேனா சின்னம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக எதிர்மனுதாரர்களுக்கு கோரிக்கை மனு அனுப்பியும் எவ்விதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மனு உச்சநீதி மன்றத்தில் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதி பதி பி.எஸ்.நரசிம்மா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் வழக் குரைஞர் ஜெயா சுகின் ஆஜராகி, 'இதே விவகாரம் தொடர்புடைய மனுக்கள் உச்சநீதி மன்றத்தில் எங்கள் மனுவை வேறு ஒரு அமர்வில் விசாரணையில் உள்ளது. அத்துடன் இதையும் இணைத்து விசாரிக்க உத்தரவிட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

அப்போது, தமிழக அரசின் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் பி.வில்சன் வாதிடுகையில், 'இந்த மனுவை விசாரணைக்கு ஏற்கக் கூடாது. ஏற்கெனவே மனுதாரர் இதுபோன்று அற்பமான மனுக்களை தாக்கல் செய்வதை வழக்கமாகக் கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டி அவருக்கு வழக்கு தாக்கல் செய்ய உயர்நீதிமன்றம் தடை விதித்திருந்தது. இதனால், இந்த மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

இதுபோன்று வழக்குகளை அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 32 இன் கீழ் தாக்கல் செய்ய முடியுமா என்று மனுதாரர் தரப்பு வழக்குரைஞரிடம் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அதைத் தொடர்ந்து, மனுவைத் தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

சென்னையில் மழை: விமான சேவை பாதிப்பு!

சென்னை, ஜூலை 13- சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது. இதேபோல புறநகர் பகுதிகளான குரோம்பேட்டை, பெருங்களத்தூர், வண்டலூர், தாம்பரம், பல்லாவரம் பகுதிகளிலும் மிதமான மழை பெய்தது.

இந்த நிலையில், சென்னையில் இடி, மின்னல், சூறைக்காற்றுடன் பெய்த மழையால் சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. 8 விமானங்கள் தரையிறங்க முடியாமல், வானில் வட்டமடித்து பறந்தன.

லண்டன், மலேசியா, சிங்கப்பூர், திருச்சியில் இருந்த விமானங்களும், தரையிறங்க முடியாமல் வானில் வட்டமடித்து, பின்னர் தரையிறங்கின. சென்னையில் இருந்து செல்ல வேண்டிய 12 விமானங்கள் 30 நிமிடம் முதல் 3 மணி நேரம் வரை தாமதமாக புறப்பட்டு சென்றன. விமானங்கள் தாமதமானதால் பயணிகள் கடும் அவதியடைந்தனர்.

திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், மார்க்கெட் பகுதிக் கழகச் செயலாளர் ஆர்.ஜி. பாபுவின் முன்னிலையில் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் முன் திருச்சி மாநகர் மாவட்ட வர்த்தக அணி பாரதிய ஜனதா கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.லோகநாதன் மற்றும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அக்கட்சியின் உறுப்பினர்கள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட மாநகரக் கழக நிர்வாகிகள் செங்குட்டுவன், தமிழ்ச்செல்வன், நூர்ஜகான், சந்திரமோகன், வட்டக் கழகச் செயலாளர் ஆர்.எம்.சுப்பிரமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.